# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

***********

**முறையீட்டு மனு எண்.239/2018/பே**
**ஆணை நாள்: 14–03–2019.**

**திரு சி.சின்னச்சாமி,**
**த/பெ.திரு.சின்னக்காளை,**
**6–2–37M, பெரியார் காலனி,**
**நிலக்கோட்டை**
**திண்டுக்கல மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்.**

**செயல் அலுவலர்,**
**நிலக்கோட்டை பேரூராட்சி,**
**திண்டுக்கல் மாவட்டம். -- எதிர் மனுதாரர்.**

**ஆணை.**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பேரூராட்சியினைச் சார்ந்த மனுதாரர் திரு.சின்னச்சாமி, என்பவரது 19.09.2018 நாளிட்ட மனு 19.09.2018 அன்றே பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.239/2018 ஆக இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யப்பட்டது. இம்முறையீட்டு மனு குறித்து உரிய அறிக்கை பெறப்பட்டும், விசாரணை மேற்கொள்ளப்பட்டும் கீழ்க்கண்டவாறான இறுதி ஆணை வெளியிடப்படுகிறது.

மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் 31.01.2018 நாளிட்ட தனது முறையீட்டு மனு எண் 018/2018 தொடர்பாக 08.05.2018ல் விசாரணைக்கு ஆஜராகுமாறு முறைமன்ற நடுவத்தால் ஆணையிடப்பட்டதெனவும், பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பொறியாளர் ஆகியோர் தனது புகாரில் குறிப்பிட்ட நிலக்கோட்டை பேரூராட்சி, 6–வது வார்டு, 2–வது தெரு லட்சுமி நகரில் கழிவு நீர் கால்வாயை சரி செய்து தருவதாக உறுதி அளித்ததால் தனது மனுவின் மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என தான் எழுதிக் கொடுத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், மேற்படி கால்வாயைச் சரி செய்ய செயல் அலுவலர் மற்றும் பொறியாளரால் நான்கு மாதங்களாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்து தனது புகார் மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரரது முறையீட்டு மனு எண். 018/2018ன் மீது பிறப்பிக்கப்பட்ட இம்முறைமன்ற நடுவ 03.09.2018-நாளிட்ட ஆணையில், புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள கழிவு நீர் வடிகால் சரி செய்யும் பணியினை, உறுதி அளிக்கப்பட்டவாறு விரைவில் முடித்து அதற்கான அறிக்கையினை முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைத்திடவேண்டுமென நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இந்நிலையில் மேற்படி பணி முடிக்கப்படாமல் உள்ள நிலை குறித்து வரப்பெற்ற மேற்படி புகாரினைத் தொடர்ந்து, இம்முறைமன்ற நடுவ ஆணைகளில் அறிவுறுத்தியவாறு பணி முடிக்கப்பட்டமை குறித்து முடிவு அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைத்திடுமாறு செயல் அலுவலருக்கு வலியுறுத்தி 01.10.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

மேலும், மனுதாரர் தரப்பிலான விளக்கங்களைப் பதிவு செய்திட ஏதுவாக 14.02.2019 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 11.01.2019 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. மனுதாரர் மேற்படி விசாரணைக்கு ஆஜராகவில்லை. இருப்பினும், 14.02.2019 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் புகாரில் குறிப்பிட்ட வடிகால் சரிசெய்யும் பணி நடைபெற்று வருவதாகவும், விசாரணையினை ஒத்தி வைக்குமாறும் மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளார். மேற்படி பணியின் முடிவு நிலையினை உறுதி செய்திட ஏதுவாக 13.03.2019 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணை நிர்ணயிக்கப்பட்டு, நிலக்கோட்டை பேரூராட்சி உதவிப் பொறியாளர் மற்றும் செயல் அலுவலருக்கான 15.02.2019 நாளிட்ட அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்படி அழைப்பாணைகளின்படி ஆஜரான நிலக்கோட்டை பேரூராட்சியின் உதவிப் பொறியாளர் (திரு.மு.ஜெயகிருஷ்ணன்) மனுதாரரது புகாரில் தெரிவித்துள்ள நிலக்கோட்டை, 6—வது வார்டு, லட்சுமி நகர், 5—வது தெரு கிழக்கு பகுதியில், வடக்கிலிருந்து தெற்காக செல்லும் கழிவு நீர் வடிகால் சரி செய்து கட்டி முடிக்கப்பட்டு தற்போது பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளதென வாக்குமூலம் அளித்ததுடன், ஆதாரமாக சம்பந்தப்பட்ட இடத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் நகல்களையும் சமர்ப்பித்துள்ளார். மேலும் பேரூராட்சி செயல் அலுவலரது 08.03.2019 நாளிட்ட முடிவு அறிக்கையினையும் சமர்ப்பித்துள்ளார்.

எனவே முறையீட்டு மனுதாரரது கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதால் இப்பொருள் தொடர்பான மேல் நடவடிக்கையினை கைவிடலாமென முடிவெடுத்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவத்தால் ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்

1.திரு.சி.சின்னச்சாமி, B.Sc.,'
த/பெ திரு.சின்னக்காளை,
6–2–37M, பெரிய காலனி,
நிலக்கோட்டிடை அஞ்சல்,
திண்டுக்கல் மாவட்டம்–628202.

2.செயல் அலுவலர்,
நிலக்கோட்டை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்–628202.

3.உதவிப் பொறியாளர்,
நிலக்கோட்டை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்–628202.

4.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திண்டுக்கல் மண்டலம்,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
திண்டுக்கல்.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி செயலர்.
முறைமன்ற நடுவ செயலாளரின் தனி செயலர்.
உதவிப் பிரிவு அலுவலர், ஊராட்சிகள் பிரிவு.